இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 203 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 21 – திங்கள்கிழமை 04 மார்ச் 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 203 : Thiruvalluvar Year - 2055 - Maasi 21 - Monday 04 March 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00




### இன்று (மார்ச் 4–ஆம் தேதி) கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கம் மற்றும் “எல்லோர்க்கும் எல்லாம்”

# ‘திராவிட மாடல்’ நாயகரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள் !

## தமிழ்நாடு முழுதும் மாநகரம், நகரங்களில் நடைபெறுகிறது! தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 4–**

**இன்று (மார்ச் 4ஆம் தேதி) தமிழ்நாடு முழுவதும் மாநகரம் மற்றும் நகரங்களில் “எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!” நடைபெறுகின்றன.**

இதுகுறித்த தலைமைக் கழக அறிவிப்பு வருமாறு :–

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 23.2.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக “தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்” நடைபெற்றது.

இக்கூட்டத்தில் “ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம் தலைவர், கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமரவைத்த பெருமையைப் பெற்றுத்தந்துள்ளார். தந்தை பெரியாரின் சமூக நீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநிலசுயாட்சிக் கொள்கையையும், தமிழினத்தலைவர் கலைஞரின் சமூகநலத்திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள்.

அத்தகைய பெருமைமிகு தலைவரின் பிறந்தநாளை நாம் அனைவரும் சீரியவகையில் கொண்டாடும் விதமாக திராவிடமாடல் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் பொதுக்கூட்டங்களை தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சி, நகராட்சிகளில் தலைமைக் கழக அறிவிப்பின்படி நடத்திடுவது” எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தின்படி, பின்வரும் விபரப்படி – மாநகரம் மற்றும்



நகரங்களில் அறிவிக்கப்பட்டுள்ள பேச்சாளர்களைக் கொண்டு, “எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!” நடத்திட வேண்டுமென தலைமைக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**நாள்: 04.03.2024 (திங்கள்கிழமை)**

| இடம் | | சிறப்புரை |
|---|---|---|
| செங்கல்பட்டு நகரம் | : | **கழகப்பொதுச் செயலாளர் துரைமுருகன்** எஸ்.ஜெகத்ரட்சகன் |
| திருநெல்வேலி மாநகரம் | : | மாண்புமிகு ஐ. பெரியசாமி |
| புகளூர் நகரம் | : | அந்தியூர் செல்வராஜ் |
| ஈரோடு மாநகரம் | : | திருமதி. கனிமொழி கருணாநிதி |
| நெய்வேலி நகரம் | : | ஆர்.எஸ்.பாரதி |
| குளச்சல் நகரம் | : | மாண்புமிகு எஸ். இரகுபதி |
| சிவகங்கை நகரம் | : | மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| புதுக்கோட்டை நகரம் | : | மாண்புமிகு டி.ஆர்.பி. ராஜா |
| விழுப்புரம் நகரம் | : | டி.கே.எஸ். இளங்கோவன் |
| தாம்பரம் மாநகரம் | : | திருச்சி சிவா |
| திருப்பத்தூர் நகரம் | : | மாண்புமிகு கோவி. செழியன் |
| தேனி நகரம் | : | பொன். முத்துராமலிங்கம் |
| திருச்சி மாநகரம் | : | பேராசிரியர் சுப.வீ. |
| புதுக்கோட்டை நகரம் | : | ஜெயரஞ்சன் |
| திருச்செந்தூர் நகரம் | : | தாயகம் கவி |
| மயிலாடுதுறை நகரம் | : | ஏ.கே.எஸ். விஜயன் |
| பூவிருந்தவல்லி நகரம் | : | திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் |
| கருமத்தம்பட்டி நகரம் | : | பவானி கண்ணன் |
| திருத்துறைப்பூண்டி நகரம் | : | குத்தாலம் பி. கல்யாணம் |
| வடலூர் நகரம் | : | திருமதி. சல்மா |
| கள்ளக்குறிச்சி நகரம் | : | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| வாலாஜாபேட்டை நகரம் | : | சிவ. ஜெயராஜ் |
| தருமபுரிநகரம் | : | காசிமுத்து மாணிக்கம் |

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

### ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு – தமிழ்நாடு அரசு வலுவான சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டதற்காக

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – ஸ்டெர்லைட் போராட்டக் குழுவினர் நன்றி!

## நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

**சென்னை, மார்ச் 4–**

**ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு தமிழ்நாடு அரசு வலுவான சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டதற்காக பூவுலகின் நண்பர்கள் அமைப்பு மற்றும் ஸ்டெர்லைட் போராட்டக் குழுவினர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.**

அதன் விபரம் வருமாறு:–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.3.2024) முகாம் அலுவலகத்தில், பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுந்தரராஜன், பிரபாகரன்,

வைத்திசெல்வன், ஜியோ டாமின், பேராட்டக் குழுவைச் சார்ந்த கிருஷ்ணமூர்த்தி, திருமதி பாத்திமா பாபு, ஹரிராகவன்,

மகேஷ்குமார், மெரினா பிரபு, சுஜித், குணசீலன், ரீகன், ராஜா, கிதர் பிஸ்மி, அம்ஜித், திருமதி வசந்தி, சிம்லா, கோபால், வாஞ்சிநாதன், திருமதி மாரியம்மாள் ஆகியோர் சந்தித்து, “தூத்துக்குடியில் சுற்றுச்சூழலுக்கு எதிரான ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்த வலுவான வாதங்களால், ஆலையை மூடியது சரியே என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியதையொட்டியும், இந்த ஆலையை மூடுவதற்கு தமிழ்நாடு அரசு வலுவான சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.3.2024) முகாம் அலுவலகத்தில், பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுந்தரராஜன், பிரபாகரன், வைத்திசெல்வன், ஜியோ டாமின், பேராட்டக் குழுவைச் சார்ந்த கிருஷ்ணமூர்த்தி, திருமதி பாத்திமா பாபு, ஹரிராகவன், மகேஷ்குமார், மெரினா பிரபு, சுஜித், குணசீலன், ரீகன், ராஜா, கிதர் பிஸ்மி, சிடர் பிஸ்னி, அம்ஜித், திருமதி வசந்தி, சிம்லா, கோபால், வாஞ்சிநாதன், திருமதி மாரியம்மாள் ஆகியோர் சந்தித்து, தூத்துக்குடியில் சுற்றுச் சூழலுக்கு எதிரான ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்த வலுவான வாதங்களால், ஆலையை மூடியது சரியே என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியதையொட்டியும், இந்த ஆலையை மூடுவதற்கு தமிழ்நாடு அரசு வலுவான சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு ஆகியோர் உடனிருந்தனர்.

தூத்துக்குடியில் 22.5.2018 அன்று ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக்கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஏற்பட்ட உயிரிழப்புகள், காயங்கள் குறித்தும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் விசாரிப்பதற்காக தமிழ்நாடு அரசால் ஓய்வுபெற்ற நீதியரசர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற திருமதி அருணா ஜெகதீசன் அவர்களின் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. மேலும், தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 13 பேரின் குடும்பத்தினருக்கு கூடுதலாக தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 65 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டதோடு, ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை போராட்டத்தின் போது உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் கொடும் காயமடைந்தவர்கள் 17 பேருக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அத்துடன் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடிட தமிழ்நாடு அரசு தொடர்ந்து சட்டப்போராட்டம் நடத்தி வந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலையை மூடியது சரியே என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை தற்போது அளித்துள்ளது தமிழ்நாடு அரசின் சட்டப் போராட்டத்திற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு ஆகியோர் உடனிருந்தனர்.